# திருவண்ணாமலை நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2019 – 2020

# திருவண்ணாமலை நகராட்சி
# நிர்வாக அறிக்கை 2019 – 2020

## 1.அமைப்பும், நிர்வாகமும்

அரசாணை எண். 57, நாள் 31.01.1896 ன்படி 01.04.1896 ல் திருவண்ணாமலை நகராட்சி அமையப் பெற்றது. இந்நகராட்சி 10.04.1959 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 29.04.1974 ம் தேதிய 1133 எண் உள்ள அரசாணையின்படி 01.05.1974 முதல் முதல்நிலை நகராட்சியாகவும் செயல்பட்டு வந்தது. பின்னர் அரசாணை எண். 85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 22.05.1998–ன்படி தேர்வு நிலை நகராட்சியாகவும், அரசாணை ஆணை எண். 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.12.2008 –ன்படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை நகராட்சியின் மக்கள் தொகை 2011 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **1,45,278** ஆகும். இதில் ஆண் - **72406** ம் பெண் - **72872** ஆகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 13.64 சதுர கிலோ மீட்டர் ஆகும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 189 எண்ணுள்ள 20.08.1996ம் தேதி அரசாணையின்படி 39 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

### நிர்வாகம்:

### அ. நகரமன்றம்

14.11.2019 முதல்முதல் 31.03.2020 வரை திரு.வே.நவேந்திரன், அவர்கள் ஆணையர் மற்றும் கூடுதல் தனி அலுவலர் பதவி வகித்தார்.

## ஆ. அங்கிகரிக்கப்பட்ட தேர்தல் வார்டுகள் விவரம்

| வ.எண் | ஒதுக்கீடு | வார்டுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. | பொது | 1, 5, 6, 7, 8, 10, 11, 14, 16, 20, 21, 26, 28, 30, 32, 34, 37, 39 | 17 |
| 2. | தாழ்த்தப் பட்டவர்கள் (பொது) | 3, 19 | 2 |
| 3. | தாழ்த்தப் பட்டவர்கள் (பெண்) | 9, 22, 36 | 3 |
| 4. | பெண்கள் ஒதுக்கீடு | 2, 4, 8, 12, 13, 15, 17, 18, 23, 24, 25, 27,29, 31, 33, 35, 38 | 17 |
| | | **மொத்தம்** | 39 |

**2. மன்ற கூட்டங்கள்**

அறிக்கை ஆண்டில் – 12 சாதாராண கூட்டங்கள் நடைபெடற்றது. மேலும் அவசர கூட்டம் மற்றும் 3 ம் நடைபெடற்றது

**அ. கூட்ட நடவடிக்கைகளும், அங்கத்தினர்கள் வருகையும்:**

அறிக்கையாண்டில 12 கூட்டங்கள் நடைபெற்றன. அதில் மொத்தம் 326 பொருட்கள் பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட்டன. கூட்டங்களில் எடுத்துக் கொண்ட பொருட்கள் ஏதும் ஒத்தி வைக்கப்படவில்லை. இவ்வறிக்கை ஆண்டில் 04.11.2019 ல் கூட்டம் நியமன குழு நடைபெடற்றது

**3. மேலாண்மை**

அறிக்கையாண்டில் மேலாண்மை செலவு ரூ.10,12,98,674/– (அனைத்து நிதிகள் ) இது சென்ற ஆண்டு ரூ. 8,35,29,561/– ஆக இருந்தது.

## 4. அறிக்கையாண்டில் பணிபுரிந்த அலுவலர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திரு.Y.சுரேந்திரன், | பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) | 15.03.2019 முதல் | 13.11.2019 வரை |
| 2 | திரு. வே. நவேந்திரன், | ஆணையாளர் | 14.11.2019 முதல் | 31.03.2020 வரை |
| 3 | திரு.Y.சுரேந்திரன், | பொறியாளர் | 15.03.2019 முதல் | 22.02.2020 வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | திரு. ஜி.ரவிச்சந்திரன் | பொறியாளர் | 22.02.2020 முதல் | 31.03.2020 வரை |
| 5 | திரு. ஆர்.திருமுருகன் | நகரமைப்பு அலுவலர் | 01.04.2019 முதல் | 31.03.2020 வரை |
| 6 | திருமதி. வி.எல்.எஸ். கீதா | மேலாளர் | 01.04.2019 முதல் | 31.03.2020 வரை |
| 7 | திரு. எல். ரவிச்சந்திரன் | உதவி பொறியாளர் | 01.04.2019 முதல் | 10.07.2019 வரை |
| 8 | திரு. பா. செங்குட்டுவன் | உதவி பொறியாளர் | 01.04.2019 முதல் | 06.08.2019 வரை |
| 9 | திரு. எஸ். ராபர்ட்கிளைவ் | உதவி பொறியாளர் | 06.08.2019 | 31.03.2020 வரை |
| 10 | திருமதி. அ. வள்ளி | உதவி பொறியாளர் | 18.10.2019 முதல் | 31.03.2020 வரை |
| 11 | திரு. எஸ். பழனிவேல் | நகரமைப்பு ஆய்வர் | 01.04.2019 முதல் | 31.03.2020 வரை |

## 5. சாலைகள்

சித்துார் ,கடலுார் மற்றும் பாண்டி பெங்களூர் மற்றும் தென் மாவட்டங்கள் போன்ற முக்கிய நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் இந்நகராட்சியுடன் இணைக்கப் பெற்றுள்ளன. மேலும் திருவண்ணாமலை முதல் சென்னை சாலை பிரதான சாலையாக உள்ளது. இதன் நீளம் 182 கிலோ மீட்டர் ஆகும்.

இந்நகரில் **455** சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் நீளம் பினவ்ருமாறு

1. சிமெண்ட் சாலை – **66.101** கி.மீ
2. தார் சாலை – **26.316** கி.மீ
3. மண் பாதை – **3. 609** கி.மீ

------

**மொத்தம் 146.026 கி.மீ**

------

**ஆ.** 13.080 கிலோ மீட்டர் தார் சாலை நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 6.00 கி.மீ தார்சாலை தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகர எல்லைக்குள் உள்ள மொத்த சாலைகளின் **165.106** கிலோ மீட்டர் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அவ்வவ்போது அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>கீழ்காணும் இடங்களில் காவல் துறையினரால் போக்குவரத்து சீரமைக்கப்பட்டு வருகிறது.</u>**

1. பெரிய தெரு – தேரடி தெரு, கொசமடத் தெரு
2. திருவூடல் தெரு – திருமஞ்சன கோபுரத் தெரு
3. திருவூடல் தெரு – தேரடித் தெரு, அசலியம்மன் கோவில் தெரு சந்திப்பு
4. அண்ணாசாலை – மத்தலாங்குளத் தெரு சந்திப்பு
5. சின்னகடைத் தெரு – மத்தலாங்குளத் தெரு, முத்துவிநாயகர் கோவில் தெருசந்திப்பு
6. திருமஞ்சனகோபுரதெரு– செங்கம் ரோடு சந்திப்பு
7. திருக்கோவிலூார் ரோடு – வேட்டவலம் ரோடு சந்திப்பு
8. பைபாஸ் ரோடு– வேட்வலம் ரோடு சந்திப்பு
9. செங்கம் சாலை – காமராஜர் சிலை அருகில்
10. சின்னக்கடைதெரு பேருந்து நிலையம் எதிரில்.

## <u>6. தேசிய நகர்ப்புற வாழ்வதார இயக்கம் – 2019– 2020</u>

சொர்ணஜெயந்தி சகரி ரோஜ்கார் யோஜனா திட்டம் முடிவடைந்து, 2019– 2020 ஆண்டின் முதல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) என்ற மத்திய, மாநில அரசின் புதிய திட்டம் செயல்பாட்டிற்கு வரப்பட்டுள்ளது.

அவ்வியக்கத்தின் வழிகாட்டலின்படி சுயஉதவிக்குழுக்களை அமைத்து பகுதி வாரிய சுயஉதவிக்குழுக்களின் ஒருங்கிணைப்பு (ALF). நகர அளவிலான சுயஉதவிக்குழுக்களின் ஒருங்கிணைப்பு (CLF) அமைக்கப்பட்டு வருகிறது.

NULM இயக்கம் கீழ் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

1. Social Mobilization & Institutional Development (SMID) – மகளிர் திட்டம் மாறுதல்
2. Self Employment Proframme (SEP) - மகளிர் திட்டம் மாறுதல்
3. Capacity Building & Training (CBT) - மகளிர் திட்டம் மாறுதல்
4. Shelter for Urban Horneless (SUH) - நகராட்சி வசம் உள்ளது
5. Scheme for Urban Street Vendors (SUSV) - நகராட்சி வசம் உள்ளது
6. Adiministration & office Expenses (A&OE) - மகளிர் திட்டம் மாறுதல்
7. Information, Education & Commenication (IEU)

## 7. பயணியர் விடுதி

இந்நகராட்சிக்கு சொந்தமான பயணியர் விடுதிகள் இல்லை பாண்டி – பெங்களூர் நெடுஞ்சாலையில் செங்கம் ரோடு ரமணாஸ்ரமம் அருகில் பொதுப்பணித்துறையினரால் ஆறு அறைகள் கொண்ட பயணியர் விடுதியும் மற்றும் அண்ணாசாலையில் நெடுஞ்சாலைத்துறை பயனியர் விடுதி வேட்டவலம் விழுப்புரம் சாலையில் 6 அறைகள் கொண்ட பயணிகள் விடுதி பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 8. தெருவிளக்கு வசதி:

இந்நகராட்சியில் 2019– 2020 ஆம் ஆண்டில் தெருவிளக்குகள் நகராட்சியின் மூலம் சென்னை என்ற தனியார் நிறுவனம் மூலம் பராமரிக்கப்படுகிறது. இதற்காக சுமார் ரூ.2400000/– செலவு செய்யப்பட்டது. தெருவிளக்கு பராமரிப்பில் மின்கட்டணம் சுமார் ரூ.63494512/– செலவு செய்யப்பட்டது.

**2019– 2020**

| SL.No | Desription | Total No.of.Lights |
|---|---|---|
| 1. | 40 W Tube Light | 2715 |
| 2. | 70W SV Lamp | 37 |
| 3. | 150W SV Lamp | 109 |
| 4. | 250 W SV Lamp | 1371 |
| 5. | 250W M.H.L. | 119 |
| 6. | 150W LED | 12 |
| 7. | 400 W High Mast fittings | 420 |
| 8. | CFL (4X36) | 530 |
| 9. | CFL (1X36) | 300 |
| | Total | 5613 |

## 9. கல்வி

அரசாணை எண். 702 கல்வித்துறை நாள் 23.05.1986ல் நகராட்சி கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் முழு நிர்வாகப் பொறுப்புகளை 01.04.1990 முதல் அரசு கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களின் பராமரிப்பு பணிகளை மட்டும் நகராட்சி செய்து வருகிறது. இவ்வகையில் அறிக்கையாண்டில் ரூ.3881074/- செலவிடப்பட்டது. இந்நகராட்சியின் பராமரிப்பில் 15 எண்ணிக்கை ஆரம்ப பள்ளியும் 2 எண்ணிக்கை நடுநிலைப் பள்ளி 2 எண்ணிக்கை உயர்நிலைப் பள்ளியும் 2 எண்ணிக்கை மேநிலைப் பள்ளியையும் ஆக 21 பள்ளிகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 10. பொது நூல் நிலையங்கள்

இந்நகரில் மாவட்ட நூலக ஆணைய குழுவினரால் கிளை நூல் நிலையம் ஒன்று இயக்கப்பட்டு வருகிறது. நூலக வரி மூலம் அறிக்கையாண்டில் நூலக ஆணைக்குழுவிற்கு ரூ.13,95,134/–நூலக வரி செலுத்தப்பட்டது. தினசரி செய்திதாள் மட்டும் வாங்கி விநியோகம் செய்யப்படுகிறது.

## 11. பள்ளி சத்துணவு மையங்கள்:

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் **18.09.1982 ல்** அமல்படுத்தப்பட்டது. இந்நகராட்சியில் **04.07.2001** முதல் அய்யங்குளத் தெரு பள்ளி, கோபால் பிள்ளையார் கோவில் தெரு பள்ளியுடன் இணைக்கப்பட்டு விட்டது. **07.06.2002** முதல் கோபால் பிள்ளையார் கோவில் தெரு நகராட்சி ஆரம்பப்பள்ளி வருகை குறைவினால் மூடப்பட்டுவிட்டது. எனவே, அறிக்கையாண்டில் **14** ஆரம்பப் பள்ளிகள் மட்டும் இயங்கி வருகிறது. **3** நடுநிலைப்பள்ளியிலும், **2** உயர்நிலைப்பள்ளிகளிலும், **2** மேல்நிலைப்பள்ளிகளிலும் செயல்பட்டு வருகிறது. **5** வயது முதல் **9** வயது வரை மற்றும் **10** வயது முதல் **14** வயது வரையில் உள்ள அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தினசரி **2330** மாணவ, மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர். ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் **1** பள்ளி சத்துணவு அமைப்பாளர், **1** சமையலர் மற்றும் **1** சமையல் உதவியாளரும் பணிபுரிந்து வருகின்றனர். அக்டோபர் 2017 முதல் 7th Pay Commission G.O.Ms.No.303 Finance Department சம்பள உள்வு செய்யப்பட்டு அமைப்பாளருக்கு 7100–20200 சமையலர் 4100–12500 மற்றும் சமயலர் உதவியாளருக்கு 3000–9000 வழங்கப்பட்டு வருகிறது.

மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பயின்று வரும் அனைத்து மாணவ மாணவியருக்கும் ( **10** வயது முதல் **14** வயது வரை ) **15.09.2014** முதல் பள்ளி வேலை நாட்களிலும் மட்டும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் மேல்நிலைப்பள்ளி சத்துணவு மையத்தில் **500** மாணவிகளுக்கு மேல் சத்துணவு வழங்கப்படுவதால் அப்பள்ளியில் **2** சமையலரும், **2** சமையல் உதவியாளரும் பணியாற்றி வருகின்றனர். பள்ளி சத்துணவு மைய பணிகளுக்கு ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் பணிபுரிந்து வருகிறார். இத்திட்டத்திற்கு 2019 – 2020 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிட்டவாறு அரசு மான்யம் பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

1. தொடர் மான்யம் வரவு – ரூ. 82.20 லட்சம்
2. செலவு – ரூ. 82.20 லட்சம்

## 12 . பொது சுகாதரம் மற்றும் மருத்துவப் பணிகள்:

### கருவிகளும், தளவாடங்களும்:

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவிக்கு தளவாட பொருட்கள் மற்றும் மருந்துகள் வாங்கிட ரூ.**2277000/-** செலவிடப்பட்டுள்ளது.

இந்நகரில் அரசு பொது மருத்துவமனை ஒன்றும், அரசு தொழு நோய் மருத்துவமனை ஒன்றும், அரசு மார்பு மருத்துவமனை ஒன்றும் உள்ளது. நகராட்சியில் சித்த மருத்துவமனை இரண்டும், நகர ஆரம்ப சுகாதார நிலையம் மூன்று நிலையங்கள் இயங்கி வருகிறது. அறிக்கையாண்டில் நகராட்சி சித்த வைத்திய சாலைகளில் கீழ்காணும் மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## 13. நகராட்சி மருத்துவப் பணி:

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் அரசாணை நிலை எண்.764, நாள் **31.03.1988** ன்படி இந்நகராட்சியில் **30.09.1993** வரை திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் **1046** எண்ணுள்ள **23.07.1993** ல் தேசிய அரசாணையில் மேற்படி திட்டம் **5** வது இந்திய மக்கள் தொகை திட்டம் என விரிவுபடுத்தப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் (குடும்ப நலம்) இரு நகர நல வாழ்வு மையங்கள் உருவாக்கப்பட்டு கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படியான பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

1. மருத்துவ அலுவலர்கள் ( பெண் ) – 3 (DDHS)
2. எழுத்தர் – 1
3. தாய் சேய் நல அலுவலர் – 2
4. நகர சுகாதார செவிலியர்கள் – 12
5. கிளாஸ் – IV Women – 2

கீழ்காணும் மூன்று நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் இடங்களில் நகர நல மையங்கள் செயல்பட்டு வருகிறது.

1. திருவண்ணாமலை மத்திய ஆரம்ப சுகாதார நிலையம், (இரயில்வே கேட் அருகில்)
2. கீழ்நாத்துார் செல்லநேரித் தெரு– திருவண்ணாமலை.
3. அண்ணாநகர் ஆரம்ப சுகாதார நிலையம், சமுத்திரம் காலணி

மேலும், மேற்படி மையங்களில் 24x 7 பிரசவம் நிலையங்களாக இயங்கி வருகிறது.

G.O.(MS) No. Health and family Welfare (EAP11-1) Department அரசாணை எண்.299 நாள் 16.12.2016 ன்படி இந்நகராட்சியின் மேற்கண்ட மூன்று ஆரம்ப சுகாதார நிலையம் NUHM திட்டத்தின் துணை இயக்குநர் பொது சுகாதாரம் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன்படி மூன்று மருத்துவ அலுவலர்கள் 9 நகர செவிலியர் மற்றும் 3 மருந்தாளுநர்கள் மேலும் மூன்று எண்ணிக்கை Lab Technician ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

| கிழமை | காலை | மாலை |
|---|---|---|
| திங்கட் கிழமை | புறநோயாளிப்பணி | வீடுவீடாக சென்று பகுதியினை பார்வையிடுதல் |
| செவ்வாய் கிழமை | புறநோயாளிபணி | கர்ப்பிணி தாய்மார்களுக்கு பரிசோதனை |
| புதன்கிழமை | புறநோயாளிப்பணி | தடுப்பூசி திட்டப்பணி |
| வியாழக்கிழமை | புறநோயாளிப்பணி | புறநோயாளிப்பணி |
| வெள்ளிக்கிழமை | புறநோயாளிப்பணி | 5வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கு பரிசோதனை பணி |
| சனிக்கிழமை | புறநோயாளிப்பணி | வார ஆய்வு கூட்டம். |

அவ்வவ்போது அரசினால் அறிவிக்கப்படுகின்ற அனைத்து நலத்திட்டங்களும் இத்திட்ட பணியாளர்களால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**குடும்ப நலம்:**

2019 – 2020 ஆண்டு இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் மற்றும் துணை இயக்குநர் மருத்துவப் பணிகள் (குடும்ப நலம்) திருவண்ணாமலை நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் சாதனை விவரம்.

| வ.எண் | குழந்தைகள் திட்ட முறைகள் | இலக்கீடு | அடைந்த சாதனை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | அறுவை சிகிச்சை | 600 | 596 | 99% |
| 2. | கருத்தடை வளையம் | 900 | 1028 | 114% |
| 3. | வாய்வழி மாத்திரை | 420 | 451 | 107% |
| 4. | ஆணுறைகள் | 600 | 648 | 108% |

## நோய் தடுப்புத் திட்டம்

தேசிய தடுப்பூசி திட்டத்தின்படி, ஒவ்வொரு மாதமும், புதன் கிழமை அன்று ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பள்ளிக்குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை தோறும் கர்ப்பிணி தாய்மார்களுக்கான பரிசோதனை மற்றும் இரண ஜன்னி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கீடு மற்றும் சாதனை விவரம் கீழ்வருமாறு (2019–2020)

| வ.எண் | குழந்தைகள் திட்ட முறைகள் | இலக்கீடு | அடைந்த சாதனை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பி.சி.ஜி | 2028 | 2026 | 99.9% |
| 2. | Pentavlent | 2028 | 2025 | 99.8% |
| 3. | தட்டம்மை | 2028 | 2025 | 99.8% |
| 4. | இரண ஜன்னி | 2231 | 2242 | 100% |
| 5. | இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து | 2028 | 2025 | 99.8% |

**மான்ய விவரம்:**

இந்நகராட்சி 5 வது இந்திய மக்கள் தொகைத் திட்டத்திற்கு (குடும்ப நலம்) 2019–2020 ஆம் ஆண்டுக்கு மான்யம் ரூ.7112984/- பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், நகர நல மையங்களுக்கு தேவையான மருந்துகளுக்கான மான்யத்தினை குடும்ப நலத்துறை இயக்குநர், சென்னை அவர்களால் வழங்கப்பட்டு தமிழ்நாடு அரசு மருந்து கட்டுப்பாடு நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் நகர நல மையங்களில் மருத்துவ சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை கீழ்வருமாறு

**2019–2020**

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய நகர நல மையம் | --- | 174960 |
| 2. | கீழ்நாத்தூர் நகர நல மையம் | –– | 157400 |
| 3. | அண்ணா நகர் நகர நல மையம் | –– | 179320 |
| | **மொத்தம்** | | **511680** |

## 14. நிறுவனமும், பணியார்களும்:

| | | |
|---|---|---|
| 1. நகர நல அலுவலர் | – | 1 |
| 2. துப்புரவு ஆய்வாளர்கள் | – | 5 |
| 3. துப்புரவு பணி மேற்பார்வையார்கள் | – | 7 |
| 4. களப்பணியாளர் | – | 1 |
| 5. துப்புரவு பணியாளர்கள் | - | 85 |

அறிக்கையாண்டில் 4 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக இருந்தது. அறிக்கையாண்டில் பொது சுகாதார பணி சிறந்த முறையில் கவனிக்கப்பட்டது.

## 15. பிறப்பு

1. அறிக்கையாண்டில் 1561 பிறப்புகள் பதிவாகி உள்ளது. இது சென்ற ஆண்டு 1200 ஆக இருந்தது.
2. தேசிய யானைக்கால் நோய் தடுப்பு சட்டத்தின் கீழ் தடுப்பு நடவடிக்கை அரசு துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வருகிறது. ஒரு பகுதியில் நகராட்சி யானைக்கால் நோய் ஒழிப்பு பிரிவு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியில் ஒரு துப்புரவு ஆய்வாளர், ஒரு துப்புரவு மேற்பார்வையாளர், 6 கொசு மருந்து அடிப்பவர்கள் ஆகியவர்களை இப்பணியில் ஈடுபடுத்தி நகரிலுள்ள கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யப்பட்டு கொசு உற்பத்தி தடுக்கப்பட்டு வருகிறது. இரவு நேரங்களில் புகை மருந்து அடிக்கப்படும் கொசு ஒழிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது. கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக அறிக்கை ஆண்டில் ரூ.40,18,965/–லட்சம் செலவு செய்யப்பட்டது. அறிக்கையாண்டில் மான்யத் தொகை ஏதும் வரப்பெறவில்லை.

## தொற்று நோய்கள்

1. **காலாரா, பிளேக், மலேரியா போன்ற நோய்களின் அபாயம் இல்லை.**
2. டெங்கு ஒழிப்பு பணிக்கக்காக 120 கொசுக் குழு ஆய்வர்கள் நியமிக்கப்பட்டு (300 வீடுகளுக்கு ஒருவர்) தினசரி கொசுக்குழு ஒழிப்புப் பணி நடைபெற்று வருகிறது. மேலும் ஒரு களப்பணி உதவியாளர் 6 கொசு புகை மருந்து அடிப்பவர்கள் கொண்டு இப்பணி நடைபெற்று வருகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவின்படி அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 6 சுற்று நிலவேம்பு கசாயம் (ஒரு சுற்று -5 தொடர்நாள் ) மேலும் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் டெங்கு பாதித்த வார்டுகளில் வீடு தோறும் கசாயம் கொடுக்கப்பட்டுள்ளது.
3. 110 விதியின் 14ன் கீழ் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் மொத்தம் **24** இடம் ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு 1500x **24** = **36000/–** கழிப்பிடங்களில் துப்புரவு பணி செய்திட 24 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளது.

## 16. துப்புரவு ( குப்பை வாருதல்)

இந்நகராட்சியில் வார்டு **1** முதல் **39** வார்டுகளில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் கொண்டும் **50** தள்ளு வண்டிகள் மூலமும், வார்டுகளில் வீடு வீடாக குப்பை சேகரித்தல், பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது 60 எண்ணிக்கையில் பேட்டரி வாகனங்கள் மற்றும் 8 எண்ணிக்கையில் இலகு இரக வாகனங்கள் வாங்கப்பட்டு முதல்நிலை குப்பை சேகரிப்புகள் என பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது கொரோனா வைரஸ் தொற்று தமிழகத்தில் ஆரம்பம் ஆன சூழலில் அதன் முன்னெச்சரிக்கைகளாக சுபசுரக்குடிநீர் பவுடர் வாங்கப்பட்டு வருகிறது. சேகரித் குப்பைகளை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லுதல் உள்ளிட்ட பணிகள் அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது**.** நகராட்சி பணியாளர்களை கொண்டு தெரு பெருக்குதல், கழிவுநீர்கால்வாய் சுத்தம் செய்தல் பணி செய்யும் நகராட்சியின் **5** டிப்பர் லாரிகள் **5** காம்பாக்டர் மற்றும் **2** டம்பர் பிளேசர் லாரிகளைக் கொண்டு குப்பை அகற்றும் பணி செய்யப்பட்டு வருகிறது**.** மேலும் நகர் எங்கும் உள்ள குப்பைகளை சேகரித்திட **80** காம்பாக்டர் பின் 40 டம்பர் பிளேசர் பின் வைக்கப்பட்டு அவற்றை அப்புறப்படுத்த டப்பர் பிளேசர் மூலம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது**.**

உர உற்பத்தி நிலையம் ஈசான்யம் ரோட்டில் 15 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. எதிர் காலத் தேவையை கருத்தில் கொண்டு இந்நகர எல்லையில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. அறிக்கையாண்டில் 5483.000 மெ.டன் குப்பைகள் உரக்கிடங்களில் கொண்டு சேர்க்கப்பட்டது. உரம் தயாரிப்பு என 12 இடங்களின் நுண் உர உற்பத்தி மையம் கட்டப்பட்டு உரம் தயாரிக்கிறது விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| நகரில் உள்ள மொத்த வீடுகள் | – | 34380 |
| கழிப்பிடங்கள் உள்ள வீடுகள் | – | 29690 |
| கட்டப்பட்ட கழிப்பிடங்கள் | – | 4690 |

துப்புரவு பணி தொழிலாளர்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் நகர் முழுவதும் குறைந்த செலவிலான கழிப்பிடம் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டதால் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மூலம் மலம் எடுப்பு மற்றும் சேகரிப்பு பணி செய்வதில்லை.

## அ. அபாயமும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்:

1. அபாயமும் மற்றும் அருவரக்கத்தக்கதுமான தொழில்கள் நடைபெறும் இடங்களை ஆய்வு செய்து 2864 இடங்கள் பதிவு செய்யப்பட்டது.
2. அபாயம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் நடத்த நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு தனியாக கட்டணம் வசூலிக்கப்படும். அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்டது.
3. அபாயம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் நடத்த உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. நகரில் கடைகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கி சுகாதார முறையில் நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## நவீன ஆட்டிறைச்சிக்கூடம்:

ரூ.23.00 இலட்சம் நவீன ஆட்டிறைச்சிக்கூடம் கட்டப்பட்டு நாள்தோறும் கால்நடை மருத்துவர் ஆய்விற்குபின் ஆடுகள் வெட்டப்பட்டு, நகராட்சி முத்திரை பெற்றப்பின் பொது மக்களுக்கு விநியோகத்திற்கு இறைச்சிகள் அனுமதிக்கப்படுகின்றன. மேலும் இறைச்சிகள் சுகாதாரப் பிரிவு மூலம் கண்காணிக்கப்பட்டு வந்தது. தற்போது பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

**நவீன எரிவாயு தகனமேடை:**

இந்நகரி ஈசான்யம் பகுதியில் ரூ.54.00 இலட்சம் செலவில் நவீன எரிவாயு தகனமேடை கட்டப்பட்டு ஸ்ரீ மகாதீபம் பொதுநல சங்கம், திருவண்ணாமலை அவர்களிடம் மூன்று ஆண்டுக்கு ஒப்படைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. தற்பொழுது நவீன எரிவாயு மேடைக்கு ஜெனரேட்டர் இயந்திரம் பிரேதங்களை எடுத்து வர ஆம்புலன்ஸ் வாகனங்கள் போன்றவை நன்கொடையாளரிடம் வசம் பெறப்பட்டு எரியூட்டிப் பணிகள் விரைவாகவும் தடையின்றி நடைபெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

**17. நகராட்சி கடைகளும், திருவிழாக்களும்**

ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை தீபத்திருவிழா நடைபெறுவது வழக்கம். இது ஒரு அரசின் அங்கீகரிக்கப்பட்ட திருவிழா ஆகும். அறிக்கையாண்டில் இவ்விழா 28.11.2019 முதல் 14.12.2019 வரை நடைபெற்றது. இவ்விழாவிற்கு 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் மற்றும் பக்தர்கள் இந்நகருக்கு வருகை தந்தனர். உற்சவ நாட்களில் கீழ்கண்டவாறு பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

1. நகரில் அனைத்து பகுதிகளிலும் பிரத்தியேகமான துப்புரவு பணி செய்யப்பட்டது. நகரில் முக்கிய பகுதிகளில் தற்காலிக பொது கழிப்பிடகள் கட்டப்பட்டது.
2. நகரிலுள்ள அனைத்து நீர் நிலைகளிலும் கிருமிநாசினி மருந்துகள் கலக்கப்பட்டது. எல்லா தெரு ஓரங்களிலும் சுண்ணாம்பு நீர் மற்றும் கிருமிநாசினிகள் மருந்துகள் தூவப்பட்டு கிருமி உற்பத்தி மற்றும் துர்நாற்றம் தடுக்கப்பட்டது.
3. நகரின் முக்கிய பகுதிகளில் குடிநீர் தொட்டிகள் அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. நகரிலுள்ள உணவு விடுதிகள் மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனை கடைகள் பிரத்தியோகமாக பார்வையிட்டு கலப்படமற்ற உணவு மற்றும் உணவுப் பொருட்கள் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. திருவிழாக் காலத்தில் துப்புரவு ஏற்பாட்டிற்கு கூடுதலாக 250 துப்புரவு தொழிலாளர்கள், 6 மேற்பார்வையாளர்கள் 5 துப்புரவு ஆய்வாளர்கள் என அருகிலுள்ள நகராட்சிகளிலிருந்து வரவழைக்கப்பட்டது. பெரிய அளவில் கால்நடை சந்தை ஒன்று உற்சவ காலத்தில் 10 நாட்கள் நடைபெற்றது.

திருவிழாக்கால வருமானம் போக மீதமுள்ள செலவுத் தொகையில் 70% தொகையை கோவில் நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்டு வருகின்றது.

திருவிழாக் காலத்தில் பொது பிரத்தியேகமாக துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டதால் யாத்ரிகர்கள் மற்றும் பார்வையாளர்கள் சுகாதார வசதி பெற்றனர். தொற்று நோய் வராமல் தடுக்கப்பட்டது.

## 18. வடிகால் வசதி 2019–2020

இந்நகரில் மொத்த கால்வாயின் நீளம் **145.555** கிலோ மீட்டர் ஆகும். அறிக்கையாண்டில் இதற்கு திட்ட நிதி (ம) வருவாய் நிதியில் ரூ.**45.00 லட்சம்** செலவிடப்பட்டது.

## பொது சுகாதாரம் பாதுகாப்பும்:

தீ தடுப்பு விதிமுறைகள் நடைமுறையில் உள்ளது. இந்நகரில் தீயணைக்கும் நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வெறிநாய்கடி தடுக்கப்பட்டு உரிமையின்றி தெருக்களில் திரிந்த நாய்கள் பிடித்து கால்நடை மருத்துவ அலுவலர் மூலம் கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 19. வருமானம் வரத்தக்க வரவினங்கள்

**வண்டிபேட்டை, பேருந்து நிலையம் மற்றும் ஆடு அறுக்கும் தொட்டி ஆகியவற்றில் இருந்து கிடைக்கப் பெற்ற வரவுகள்:**

| வருடம் | வண்டி பேட்டைகள் | பேருந்து நிலையம் | ஆடு தொட்டி |
|---|---|---|---|
| **2004 - 2005** | 12,000/- | 18,81,000/- | 81,000/- |
| **2005 - 2006** | 12,600/- | 20,39,000/- | 84,000/- |
| **2006 - 2007** | 4,21,000/- | 20,94,000/- | 88,000/- |
| **2007 - 2008** | 4,25,000/- | 20,00,000/- | 1,00,000/- |
| **2008 - 2009** | 4,15,000/- | 19,86,000/- | 83,000/- |
| **2009 - 2010** | 16,000/- | 19,53,000/- | 87,500/- |
| **2011 - 2012** | 16,800/- | 21,00,650/- | 1,03,231/- |
| **2012 - 2013** | 17,640/- | 22,05,680/- | 1,08,390/- |
| **2013-2014** | 19,530 | 25,31,800 | 1,30,956 |
| **2014-2015** | 19,530 | 25,53,390 | 1,22,377 |

| | | | |
|---|---|---|---|
| **2015-2016** | 1,30,000 | 23,00,000 | 1,35,000 |
| **2016-2017** | 1,36,500 | 24,15,000 | 1,41,750 |
| **2017-2018** | 1,43,375 | 25,35,750 | 1,48,838 |
| **2018-2019** | 1,51,468 | 26,63,750 | 1,54,742 |
| **2019-2020** | 1,64,850 | 31,55,250 | 1,93,250 |

## ஆ. பேருந்து நிலையம்

மத்திய பேருந்து நிலையம் 01.04.1985 முதல் சின்னகடைத் தெருவில் இயங்கி வருகிறது. மாநிலத்தில் பல பகுதிகளில் இருந்து தினசரி பேருந்துகள் வந்து செல்கின்றன.

## இ. ஆடுதொட்டி:

இந்நகராட்சியால் ஆடுதொட்டி பராமரிக்கப்பட்டு வருகிறது. தனியார் ஆடு தொட்டி எதுவும் இந்நகரில் இல்லை. பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.23.00 லட்சம் மதிப்பீட்டில் நவீன ஆடுவதை கூடம் கட்டப்பட்டுள்ளது. சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.11183/2007/பி3 நாள் 10.03.2007 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு மானியமாக ரூ.10.00 லட்சமும் நகராட்சி பங்கு தொகையாக ரூ.13.00 லட்சம் ஆகும். மேலும் 17.04.2010–ல் திறக்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. 2019–20 ம் ஆண்டில் ரூ.1,93,250/– வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## 20. மரம் நடுதலும், பூங்காக்களும்:

அ. அறிக்கையாண்டில் மரக்கன்றுகள் ஏதும் நடப்படவில்லை.
ஆ. மரம் நடும் திட்டம் நடைமுறையில் இருக்கிறது.
இ. மரம் நடுதலை அபிவிருத்தி செய்யும் திட்டம் இருக்கிறது.
ஈ. மரங்களை பராமரிக்க சிப்பந்திகள் நியமிக்கப்படவில்லை.
உ. நகராட்சியால் ஐந்து பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## நில ஆக்கிரமிப்பு

சாலை ஓரங்களில் ஆட்சேபனை இல்லாத தற்காலிக ஆக்கிரமிப்புக்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது. போக்குவரத்திற்கும் பொது சுகாதாரத்திற்கும் இடையூறு உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டது.

## 21. இதர வருமானம் தரும் இனங்கள்: 2019 – 2020

**தொகை ரூ.**

| | | |
|---|---|---|
| 1 | காய்கறி மார்கெட் மற்றும் சிவன்படத் தெரு மார்கெட் கடைகள் | 265650 |
| 2 | ஆடு அறுக்கும் தொட்டி | 193200 |
| 3 | சாலை ஓர தற்காலிக கடைகள் உரிமம் | 1606500 |
| 4 | சுற்றுலா மோட்டார் கட்டண வசூல் குத்தகை | 3780000 |
| 5 | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளிடம் கட்டணம் வசூல் குத்தகை | 3155250 |
| 6 | பேருந்து நிலைய சைக்கிள் மற்றும் மொபைட் நிறுத்தும் இடம் குத்தகை | 1608600 |
| 7 | பேருந்து நிலைய TV விளம்பரம் | 90300 |
| 8 | பேருந்து நிலைய ஒலிபெருக்கி விளம்பரம் | 11025 |
| 9 | முத்துவிநாயகர் கோயில் தெரு தங்கும் விடுதி | 137550 |
| 10 | ஈசான்யம் வாகன நிறுத்துமிடம் கட்டண வசூல் | 164850 |
| 11 | முத்து விநாயகர் கோவில் தெரு | 74235 |
| 12 | டிரக்டெக்மினல் கட்டண வசூல் | 221550 |
| 13 | அனைத்து கடைகளின் வாடகை | 26744145 |
| | **மொத்தம்** | **38052855** |

## 22. வருவாய் இனங்கள் (2019–20)

**1. வரி விதிப்பு நடப்பாண்டில் கீழ்கண்டவாறு இருந்தது.**

| | |
|---|---|
| வீட்டு வரி ஆண்டிற்கு | ரூ.30/– |
| பொது | ரூ. 7/– |
| தண்ணீர் வரி | ரூ.12/– |
| சாக்கடை வரி | ரூ. 3/– |
| கக்கூஸ் வரி | ரூ. 5/– |
| விளக்குகள் வரி | ரூ. 3/– |
| | ––––– |
| **மொத்தம்** | **ரூ.30/–** |
| | ––––– |

அறிக்கையாண்டு வரை 30457 கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது.

**காலிமனை வரி**

சதுரடி 1–க்கு A Zone 0.40 பைசா
B Zone 0.30 பைசா
C Zone 0.20 பைசா என்ற விதத்தில் நடைமுறையில் உள்ளது.
நகரமன்ற தீர்மானம் எண் 471 நாள் 30.10.2008.

## 23. தொழில் வரி

அரசாணை எண். G.O.(MS) 11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1999 மற்றும் இந்நகரமன்ற அனுமதி எண். 955 நாள் 31.07.2018ன் படியும் திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நடத்தப்பட்டு வரும் நுண்ணறிவு திறன் தொழில்கள், வணிக தொழில்கள், மரபு தொல், தொழிற்சாலைகள், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர்கள் ஆகியோர்களுக்கு 01.10.2013 முதல் தொழில்வரி திருத்தியமைத்து பின்வருமாறு வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண் | சராசரி 6 மாத வருமானம் (ஒரு அரையாண்டு) | 01.10.2013 முதல் உயர்த்தடப்பட்ட தொழில்வரி (2017–18) | 01.10.2018 இரண்டாம் அரையாண்டு முதல் உயர்த்தப்பட்ட தொழில்வரி (2018–2019) |
|---|---|---|---|
| 1 | 21000 முதல் 30000 வரை | ரூ. 119 | ரூ. 160/- |
| 2 | 30001 முதல் 45000 வரை | ரூ. 300 | ரூ.405/- |
| 3 | 450001 முதல் 60000வரை | ரூ. 588 | ரூ.793/- |
| 4 | 60001 முதல் 75000வரை | ரூ. 881 | ரூ.1190/- |
| 5 | 75001 முதல் மேல் | ரூ. 1175 | ரூ.1250/- |

## 24. பொது

அறிக்கையாண்டில் வரவு ரூ. 327542632/– எனவும், செலவு ரூ. 414496081/– ஆகவும் இருந்தது.

அறிக்கை ஆண்டின் ஆரம்ப இருப்பு விவரம்

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | ரூ. 322131397 |
| வரவு | ரூ. 327542632 |
| | ---------- |
| மொத்தம் | ரூ. 649674029 |
| செலவு | ரூ. 414496081 |
| | ----------- |
| **மொத்த இருப்பு** | **ரூ. 828992162** |
| | ------------ |

## 25. வரி விகிதம்: (2019–20)

அறிக்கையாண்டில் 10 கட்டிடங்களுக்கு புதிய சொத்து வரி விதிக்கப்பட்டது. தொகை ரூ. 1.17 இலட்சம் மொத்தம் கேட்பு ரூ.977.65 இலட்சம் வரி விதிப்பு கட்டிடம் ஒன்றுக்கு ரூ.894/– ஆகும். சென்ற ஆண்டில் ரூ.1928/– ஆக இருந்தது.

## 26. சாதாரண ஆதாரங்கள்:(2019–20)

அறிக்கையாண்டில் அனைத்து நகராட்சிஅலுவலர்களுக்கு ஊதியம் வழங்கிய வகையில் ரூ. 140284723/–செலவிடப்பட்டது.

## 27. மூலதனச் செலவு: (2019–20)

அறிக்கையாண்டில் மூலதனச் செலவு ரூ. 116871551/–

## 28. கடன்: (2019–20)

அறிக்கையாண்டு ஆரம்பத்தில் ரூ. 169960696/–கடனும் , கடனில் ரூ.25494104/– திருப்பி செலுத்தப்பட்டது. ஆண்டு இறுதியில் திருப்பி செலுத்த வேண்டிய தொகை ரூ.144466592/– நிலுவையாக உள்ளது.

## 29. தணிக்கை தடைகளின் விபரம்

| ஆண்டு | நிதி | சிறப்பு பத்தி | தொகை ரூ | சாதாரண பத்தி (கு.குறிப்பு) | தொகை ரூ | மொத்தம் | தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2000–2001 முதல் 2017–2018 | வருவாய் நிதி | 190 | 404543066.35 | 100 | 123569284.00 | 290 | 528112350.35 |
| | குடிநீர் நிதி | 74 | 370982766.00 | 55 | 87778565.00 | 129 | 458761331.00 |
| | கல்வி நிதி | 16 | 21690340.35 | 12 | 526923.00 | 28 | 22217263.35 |
| 2018–2019 | வருவாய் நிதி | -- | -- | 162 | 22578465.00 | 162 | 22578465.00 |
| | குடிநீர் நிதி | -- | -- | 48 | 14497007.00 | 48 | 14497007.00 |
| | கல்வி நிதி | -- | -- | 16 | 748316.00 | 16 | 748316.00 |
| **ஆக மொத்தம்** | | **280** | **797216172.70** | **393** | **249698560.00** | **673** | **1046914732.70** |

## 30. வழக்குகள்:

**நகராட்சியில் தொடரப்பட்ட வழக்குகள் விவரம்**

1. சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு — 21 எண்ணிக்கை
2. மாவட்ட நீதிமன்றம் — 29 எண்ணிக்கை
3. சப் கோர்ட் வழக்குகள் — 6 எண்ணிக்கை
4. தொழிலாளர் நீதிமன்றம் வழக்குகள் — 1 எண்ணிக்கை
5. நுகர்வோர் நீதிமன்றம் — 1 எண்ணிக்கை

----------------------------

**58 எண்ணிக்கை**

-------------------------------

திரு.எஸ். வேலு, பி.ஏ.,எல்., என்பவர் நகராட்சி சட்ட ஆலோசகராக செயல்பட்டு வருகிறார்.

## 31. கொடி நாள் வசூல்:

2019–2020 ஆம் ஆண்டின் கொடி நாள் வசூல் திட்டத்திற்கு ரூ. 200000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 32. குடிநீர் விநியோகம் 2019–2020

திருவண்ணாமலை நகராட்சியின் மூன்று குடிநீர் திட்டங்கள் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இதில் முதல் கட்ட குடிநீர் திட்டம் 1934 ல் ஆண்டு சமுத்திரம் ஏரிக் கரையில்

உறிஞ்சுகள் அமைத்து அதிலிருந்து 50 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் நீர் இறைவு செய்யப்படுகிறது.

பின்னர் 1969 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்ட குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சாத்தனூர் அணையில் கீழ்புறத்தில் 7 கிலோ மீட்டர் தொலைவில் உலகலப்பாடி கிராமத்தில் தென்பெண்ணையாற்றில் குறுக்கே கட்டப்பட்ட பிக் அப் அணைக்கட்டிலிருந்து இயல்பு நீர் எடுக்கப்பட்டு இத்திட்டத்தில் பிக்அப் அணைக்கட்டிலிருந்து 30 குதிரைத் திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் மூலம் இயல்பு நீர் எடுக்கப்பட்டு அங்கிருந்து சுமார் 700 மீட்டர் துாரத்திற்கு உலகலப்பாடி நீரேற்று நிலையத்திற்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு 2 வடிகட்டி படுகைகள் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு 100 குதிரைத்திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் குடிநீர் உந்தப்பட்டு சுமார் 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகருக்கு கொண்டு வரப்படுகிறது. இந்த

சுத்திகரிப்பு குடிநீர் சோமவாரகுளத் தெருவில் முதலில் கட்டப்பட்ட 4.50 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட தரைமட்ட தொட்டிக்கு வந்து சேருகிறது. இங்கிருந்து வ.உ.சி. நகர் தெருவில் அமைக்கப்பெற்றுள்ள 6.82 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரை மட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு நீர் இறைக்கப்பட்டு பகிர்மானக் குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு ரூ.17.50 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நபர் ஒருவருக்கு 120LPCD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

<u>நீர் தேக்க தொட்டி (ம) கொள்ளளவு விவரம்.</u>

| | |
|---|---|
| 1. வ.உ.சி. நகர் | 6.75 லட்சம் லிட்டர் |
| 2. பேகோபுரத் தெரு | 10.00 லட்சம் லிட்டர் |
| 3. சோமவாரக் குளம் | 4.50லட்சம் லிட்டர் |
| 4. சோமவாரக் குளம் | 6.75 லட்சம் லிட்டர் |
| 5. சோமவாரக் குளம் | 3.00 லட்சம் லிட்டர் |
| 6. பூமாத்தா குளம் | 8.00 லட்சம் லிட்டர் |
| 7. புதிய பேருந்து நிலையம் | 10.00 லட்சம் லிட்டர் |
| 8. பழைய பேருந்து நிலையம் | 18.00 லட்சம் லிட்டர் |
| 9. தாமரை நகர் | 1.50 லட்சம் லிட்டர் |
| 10.அண்ணாநகர் | 3.50 லட்சம் லிட்டர் |
| 11. திருக்கோவிலூர் சாலை | 2.00 லட்சம் லிட்டர் |
| 12.அண்ணா நகர் | 6.80 லட்சம் லிட்டர் |
| 13. தேனிமலை | 4.20 லட்சம் லிட்டர் |
| 14. பச்சையம்மன் கோயில் தெரு | 5.00 லட்சம் லிட்டர் |
| 15. செங்கம் சாலை | 2.00 லட்சம் லிட்டர் |
| **மொத்தம்** | **92.00 லட்சம் லிட்டர்** |

மேலும் இந்நகராட்சியில் 252 சிறுமின்விசை பம்புகள் மூலம் தண்ணீர் வழஙகப்பட்டு வருகிறது. 195 எண் பொது குழாய்களும், உள்ளது. 28 எண்ணிக்கை திறந்தவெளி கிணறும் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

**குடிநீர் டேங்க் லாரிகளின் விவரம்**

1. TN25 2969 - டேங்கர் லாரி 10000லிட்டர்
2. TN M 2863 - மினி லாரி 6000 லிட்டர்

## 33. அரசு கடன்கள் திருப்பி செலுத்திய விவரங்கள்

அறிக்கையாண்டில் நகர்புற வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தில் கடன் பெறப்பட்ட கடன் தொகையில் ரூ.6272465/–திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

## 34. சொத்து வரி – 2019–20

அறிக்கையாண்டில் நிலுவை (ம) நடப்பாண்டு சொத்து வரி கேட்பு ரூ. 997.64 லட்சம் கேட்பில் அறிக்கை ஆண்டில் ரூ.386.76 லட்சம் வசூல் செய்யப்பட்டது. வசூல் விழுக்காடு 39.66% ஆகும்.

## 35. திட்டத்தின் பெயர் – 2019 – 2020

| வ.எண் | | மொத்த பணிகள் | தொகை ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|---|
| | **TURIP – 2019-20**<br>Providing BT Surface with storm water drain | 5 | 1000.00 |
| | **14th CFC – 2019-20**<br>Providing BT Surface with storm water drain | 13 | 442.77 |
| | **UGSS O&M 2019-20**<br>Operation & maintanance of UGSS including collection system, pumping stations, STP lifting station and alla over UGD works. | 1 | 138.56 |
| | **MLA CDS 2018-19**<br>Furniture, ICDS Building, Multi purpose Building Deepening of Open Well , CC Pavenment, | 7 | 45.68 |
| | **MLA CDS 2019-20**<br>Provding BT Surface, CC Pavement, Borewell arrangements, Culvert Drain | 12 | 45.60 |
| | **MLA CDS 2016-17**<br>Providing Borewell with MPP arrangements | 1 | 2.00 |
| | **Total** | 39 | 1674.61 |

## 36. பாரத பிரதமரின் துய்மை இந்தியா திட்டம் (2019-20)

திருவண்ணாமலை நகராட்சியில் பாராத பிரதமரின் துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிவறை இல்லாத வீடுகளுக்கு தனிநபர் கழிவறை திட்டத்தின் கீழ் 1868 எண்ணிக்கை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் 1868 எண்ணிக்கை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதற்காக பயனாளிகளின் பங்குத் தொகையாக ரூ.4000/-யும் மத்திய அரசு மான்யத் தொகையாக ரூ.4000/- மாநில அரசு தொகை ரூ.2000/- நகராட்சி பங்குத் தொகை ரூ.2000/- ஆகும். ஆக மொத்தம் தனி நபர் கழிப்பிடத்திற்கு மதிப்பீடு ரூ.12,000/- ஆகும். இந்நகராட்சியில் 39 வார்டுகளில் திறந்தவெளி கழிப்பிடம் அகற்ற வார்டுகளாக அறிவிக்கப்பட்டு இதுவரை இத்திட்டத்திற்காக ரூ.14,94,40,00/- செலவிடப்பட்டுள்ளது.

## 37. பொது குறிப்பு

இந்நகர மக்களுக்கு சுகாதார வசதி, குடிநீர் வசதியும் மற்றும் தெரு விளக்கு வசதிகள் போன்ற அடிப்படை வசதியின் செம்மையாக செய்து வருகின்றது. சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினவிழா வழக்கம் போல் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. நிர்வாகத்தில் உள்ள அனைத்து பிரிவு பணியாளர்களும், அலுவலர்களும் நல்ல முறையில் செயலாற்றினர்கள். நிர்வாகம் சிறந்த முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், நகரமன்றத்தலைவர் அவர்களுக்கும், நகரமன்ற உறுப்பினர்களுக்கும், நகராட்சி அலுவலர்களுக்கும் மற்றும் இதர பணியளாளர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

## 38. அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம்

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமையும் மனைகள் வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் 198 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டது. இதன்மூலம் நகராட்சிக்கு ரூ.58 லட்சம் அளவில் அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

26/6/20

ஆணையாளர்
திருவண்ணாமலை நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
திருவண்ணாமலை.
நாள் 26.06.2020

26/06/2020